## OS.No.265/2024, Dated 09.10.2025

The witness sworn under Oaths Act 1969 on this the 9th day of October 2025.

**வா.சா.1 – மாலதி க/பெ. ஜெகதீசன் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எனது சொந்த ஊர் மீசநல்லூர் ஆகும். எனது தாய் வீடும் மீசநல்லூர் தான். எனது கணவரின் சொந்த ஊர் தெள்ளார் ஆகும். நானும் எனது கணவரும் முதலில் சென்னையில் குடியிருந்தோம். அதன் பின்னிட்டு மீசநல்லூர் வந்து விட்டோம். எனது கணவர் சென்னையில் துறைமுகத்தில் அரசு பணியில் இருந்தார். அவர் விருப்ப ஓய்வு பெற்றுவிட்டார். அவர் விருப்ப ஓய்வு பெற்ற பின்னிட்டு தெள்ளாரில் பைனான்ஸ் நடத்தினார் என்றால் சரிதான். அந்த பைனான்சின் பெயர் எனக்கு தெரியவில்லை. யார் யார் அதில் பார்ட்னராக இருந்தார்கள் என்றால் அவரது நண்பர் குப்பன் பார்ட்னாராக இருந்தார். அந்த பைனான்சை எனது கணவர் இறந்த பின்னிட்டு கலைத்து விட்டோம். எனது கணவர் இறந்த பின்னிட்டு அந்த பைனான்சின் வரவு செலவு கணக்குகள் யார் பொறுப்பில் இருந்தது என்றால் அந்த கணக்குகளை யாரோ தூக்கி சென்றுவிட்டார்கள். எனது கணவர் இருந்த வரை அந்த கணக்குகள் எனது கணவரின் பொறுப்பில் தான் இருந்தது. எங்கள் கணவர் இறந்த பிறகு நானும் குப்பனும் வரவு செலவு கணக்கு பார்த்து பிரித்து கொண்டோமா என்றால் எனது கணவர் உயிருடன் இருக்கும் போதே குப்பன் பங்குதாரராக இருந்து ஒதுங்கிவிட்டார். பைனான்ஸ் எந்த முகவரியில் வைத்திருந்தார்கள் என்றால் தெள்ளாரில் இரண்டு இடங்களில் வைத்திருந்தார்கள். ஒன்று தெள்ளார் ஐ.ஓ.பி வங்கி அருகிலும். மற்றொன்று பி.டி.ஓ அலுவலகம் அருகிலும் வைத்திருந்தார்கள். எனது கணவர் இருந்த வரை கொடுக்கல் வாங்கல் கணக்குகளை அவர்தான் பார்த்து வந்தார். பணம் கொடுக்கல் வாங்கல் தொழிலையும் அவர்தான் பார்த்து வந்தார். நான் எந்த கொடுக்கல் வாங்கலையும்,

எனது கணவர் இருக்கும் வரை செய்யவில்லை என்றால் பிரதிவாதிக்கு மட்டும் தான் நான் பணம் கொடுத்தேன். பிரதிவாதிக்கு எனது கணவர் பணம் கொடுக்கல் வாங்கல் செய்த விபரம் எனக்கு தெரியாது. பிரதிவாதி மாம்பட்டு கிராமத்தை சேர்ந்தவர். பிரதிவாதி எனக்கு நேரடியாக அறிமுகம் கிடையாது. நான் பார்த்திருக்கிறேன். எனது கணவருடன் சென்று வரும்போது நான் பிரதிவாதியை பார்த்திருக்கிறேன். பிரதிவாதி என்ன தொழில் செய்கிறார் என்றால் பிரதிவாதி மளிகை கடை வைத்திருக்கிறார். சிறிய அளவிலான மளிகை கடை ஆகும். எனது கணவர் அக்கம் பக்கம் கிராமத்தில் பணம் கொடுக்கல் வாங்கல் செய்தாரா என்று எனக்கு தெரியாது. எனது கணவர் BE., Civil பொறியியல் படிப்பு படித்திருந்தார். நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது கணவர் இருந்த காலத்தில் பிரதிவாதி கடை அருகில் பிரச்சனை நடந்ததா என்றால் எனக்கு தெரியாது. நான் பிரதிவாதியின் கடை அருகே சென்று பணம் கேட்டதில்லை. பிரதிவாதியின் கடையும் வீடும் எதிரெதிராகவே உள்ளது. இவ்வழக்கு சம்பந்தமாக நான் பிரதிவாதியிடம் அவரது வீட்டில் வைத்து பணம் கேட்டேன். அப்போது பிரச்சனை ஏதாவது ஏற்பட்டதா என்றால் இல்லை. எனது கணவரின் கையெழுத்து எனக்கு பரிட்சயம் தான். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து எனது கணவருடையதா என்பதை தற்சமயம்ட என்னிடம் கண்ணாடி இல்லாத காரணத்தினால் படித்து பார்த்து சொல்ல இயலவில்லை. எங்கள் வீட்டில் வைத்து நான் பணம் கொடுத்தேன். நேரம் ஞாபகம் இல்லை 17.04.2019 அன்று கொடுத்தேன். தென் வணக்கம்பாடி வாசு என்பவர் எனது உறவினர். எங்கள் நிலத்தில் வந்து வேலை பார்ப்பார். பணம் கொடுக்கும்போது எனது மருமனான பிரம்மதேசத்தை சேர்ந்த ஷேஷாத்திரி என்பவர் பார்த்தார். ஷேஷாத்திரியிடமும், வாசுவிடமும் கையெழுத்து வாங்கி பாண்டினை தாக்கல் செய்தேனா என்றால் ஷேஷாஸ்திரி எழுதினார். வாசு சாட்சி கையொப்பம் போட்டார். அந்த பாணடில் வாசு மட்டும் சாட்சி கையொப்பம் போட்டார். ஷேஷாஸ்திரி எழுதி கையொப்பம் செய்தார்.

ஷேஷாஸ்திரி எழுதியதாகதான் கையொப்பம் செய்தார். பிரதிவாதி எனக்கு எத்தனை வருடங்களாக பழக்கம் என்றால் எனக்கு பிரதிவாதி பழக்கம் இல்லை. எனது கணவர் மூலமாகதான் பிரதிவாதி என்னிடம் பணம் கேட்டதாக நான் சொல்கிறேன். பிரதிவாதிக்கு ரூ.6 லட்சம் திருப்பி கொடுக்கும் அளவிற்கு சக்தி உள்ளதாக எனது கணவர் சொல்லி தான் தெரியும். எனது கணவரிடம் பிரதிவாதி பணம் வாங்கி திருப்பி கொடுத்துள்ளார் என்ற விபரங்களை எனது கணவர் என்னிடம் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. சென்னை சைதாப்பேட்டையில் இந்தியன் வங்கியில் நானும் எனது கணவரும் கூட்டு கணக்கு வைத்திருந்தோம். தெள்ளார் இந்தியன் ஓவர்சிஸ் வங்கியிலும், தெள்ளார் கூட்டுறவு வங்கியிலும் எனக்கு கணக்கு உள்ளது. அந்த கணக்குகளிலிருந்து தான் பணம் எடுத்து வந்து கொடுத்தேன். அந்த வங்கி கணக்கு விபரங்களை பார்த்தால் பணபரிவர்த்தனைகள் குறித்து தெரியவருமா என்றால் எனக்கு அவை தெரியாது. நான் எனது வீட்டில் ரூ.1,50,000/– பணம் வைத்திருந்தேன். மீதி பணம் வங்கியில் எடுத்து வந்தேன். இந்த பரிவர்த்தனைக்கும் எனது கணவருக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். நான் பிரதிவாதிக்கு எந்த பணமும் கொடுத்ததில்லை என்றாலும், எனது கணவரிடம் தான் விழா சமயங்களில் அவரது கடைக்கு வியாபாரத்திற்காக சரக்கு எடுப்பதற்கு மட்டும் எனது கணவரின் பைனான்சில் கொடுக்கல் வாங்கல் வைத்திருந்தார் என்றால் சரியல்ல. 2018ல் தீபாவளி சமயத்தில் ரூ.25000/–மும், 2019 ல் பொங்கல் சமயத்தில் ரூ.40000/–மும் எனது கணவரிடம் கடனாக பெற்று அதை திருப்பி கொடுத்துவிட்டார் என்றால் எனக்கு அந்த விபரங்கள் தெரியாது. பிரதிவாதி வாங்கிய பணத்தை 09.03.2019 தேதியில் திருப்பி கொடுத்துவிட்டார் என்றாலும், அதற்கு எனது கணவர் கைப்பட பாக்கி இல்லை என்று எழுதி கொடுத்துவிட்டார் என்றாலும், பிரதிவாதி கையெழுத்திட்டு கொடுத்த பாண்டை கேட்டபோது வீட்டிலிருப்பதாகவும், எடுத்து வரவில்லை என்றும் கூறிவிட்டு பிரதிவாதிக்கு ஒப்புகை மட்டும் எழுதிக்கொடுத்தார் என்றால்

எனக்கு இந்த விபரங்கள் எதுவும் தெரியாது. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிரதிவாதி பதில் அனுப்பியிருந்ததை எனது வழக்கறிஞர் என்னிடம் படித்து காட்டினார். எனது கணவர் பைனான்ஸ் நடத்தியது குறித்தும், பிரதிவாதிக்கு பணம் கொடுத்தது குறித்தும் தெரியாது என்று நான் கூறியுள்ளபோது, பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பில் உள்ள சங்கதிகள் பொய்யானவை என்று கூறுகிறேனா தெரியாது என்று கூறுகிறேனா என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. ஆனால் அது பொய்யான சங்கதிகள். எனது கணவருக்கும் பிரதிவாதிக்கும் இருந்த கொடுக்கல் வாங்கல் தெரியாமலேயே நான் 10.05.2021 தேதியில் மறுப்பு அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் நான் சங்கதிகள் தெரிந்து தான் அனுப்பினேன். எனது கணவர் பிரதிவாதிக்கு கொடுத்த பணத்திற்கு எழுதிக் கொடுத்த பாண்டினை திருப்பி கொடுக்காமல் அது வீட்டிலேயே இருந்ததால் அதை எனது கணவர் இறந்த பின்னிட்டு எனது மருமகன் ஷேஷாஸ்திரி மற்றும் எனது நிலத்தில் வேலை செய்யும் வாசு உதவியுடன் ஜோடனையாக வேறு பாண்டினை உருவாக்கி மோசடியாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு பணம் கொடுத்ததில்லை என்றாலும், அவர் எனக்கு பாண்டும் எழுதிக்கொடுத்ததில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு திருப்பி கொடுக்க வேண்டிய பாக்கி எதுவும்ட இல்லை என்றால் சரியல்ல. நான் அறிவிப்பிலும் தாவாவிலும், மறு அறிவிப்பிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் பிரதிவாதி எனக்கு பணம் கொடுக்க வேண்டுமென்று சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியிடம் பாண்டை பைசல் செய்யும் படி கேட்டதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கும் பிரதிவாதி உரிய பதில் அறிவிப்பை 19.04.2021 அன்று அனுப்பியுள்ளார் என்றாலும், அதில் உள்ள சங்கதிகளும், எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகளும் மட்டுமே உண்மையானவை என்றால் சரியல்ல. நான்

பிரதிவாதியை ஏமாற்றி பணம் பறிக்க வேண்டுமென்ற நோக்கில் யாருடைய தூண்டுதலின் பெயரிலோ பொய்யான பாண்டின் பெயரில் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தவிர வேறு எந்த பாண்டு வழக்குகளும் நான் தாக்கல் செய்ததில்லை. எனது கணவர் தீர்ப்பு பெற்றதன் பேரில் நிறைவேற்று மனுக்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு இரண்டு மகள்கள் உள்ளனர். ஒருவர் பிரம்மதேசத்திலும், மற்றொருவர் வேலூரிலும் உள்ளார். எனது மகள்கள் பாண்டின் பெயரில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. அவர்கள் நிறைவேற்று மனுக்களும் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கிற்கு வியாஜியமூலம் இல்லை என்றாலும், பிரதிவாதிக்கு எதிராக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா பாண்டு பிரதிவாதியால் எழுதிக்கொடுக்கப்பட்டதல்ல என்றால் சரியல்ல. அது மோசடியாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனவே எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. வாசு மற்றும் ஷேஷாத்திரியை நான் சாட்சிகளாக விசாரிக்கிறேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S Digitally signed by SARANYA S Date: 2025.10.09 18:27:55 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்